ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1949/38 - 2016 ජනවාරි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.01.14
*1949/38 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டம்

வடக்கு மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி அமைச்சருமானவரால் 2014 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டத்தின் 35 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்நியதிச் சட்டத்தின் 75(1)(அ) ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

க.வி.விக்னேஸ்வரன்,
முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும்,
காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறை மற்றும்
தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி
மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்,
வடக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் செயலகம்,
வடக்கு மாகாண மாகாண சபை,
இல.26, சோமசுந்தரம் வீதி,
யாழ்ப்பாணம்.
2015, திசெம்பர் 31.

**ஒழுங்குவிதிகள்**

வடக்கு மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, நியதிச்சட்டத்தின் 35 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்நியதிச்சட்டத்தின் 75(1)(அ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, வடக்கு மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும், நிதி அமைச்சருமாகிய கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆகிய நான் 2015, யூலை மாதம் 08 ஆந் திகதியில் இருந்து இங்கு தரப்பட்ட அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சாதனத்தின் மீதும் அதே அட்டவணையின் II ஆம் நிரலில் ஒத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் விகிதங்களில் முத்திரை தீர்வை அறவிடப்படல் வேண்டும்.

**அட்டவணை**

| விடய இல. | நிரல் I | நிரல் II தீர்வை ரூ. ச. |
|---|---|---|
| 1. | **(1) சமஉரித்தாளிகள் அல்லாதவர்களுக்கு இடையில் ஏதேனும் ஆதனம் பரிமாற்றம் செய்வதற்கான காணி உறுதி அல்லது ஆவணம் அல்லது சாதனம்:-** | |
| | (அ) சமபெறுமதி உடையதாக இருந்தால் அத்தகைய ஆதனத்தின் கைமாற்றத்திற்கான சந்தைப் பெறுமதியில் கணித்த அதே தீர்வை | |
| | (ஆ) சமபெறுமதி அற்றதாக இருந்தால்- அதில் பெறுமதி கூடிய ஆதனத்தின் கைமாற்றத்திற்கான சந்தைப் பெறுமதியில் கணித்த அதே தீர்வை | |
| | (2) சமஉரித்தாளிகளுக்கு இடையில் ஏதேனும் ஆதனம் பரிமாற்றம் செய்வதற்கான காணி உறுதி அல்லது ஆவணம் அல்லது சாதனம் :- | |
| | (அ) சமபெறுமதி உடையதாக இருந்தால் | 10.00 |
| | (ஆ) பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கு பணக் கொடுப்பனவு செய்யப்படுமிடத்து ஒவ்வொரு பங்கினதும் சந்தைப்பெறுமதியின் வேறு பாட்டிற்கு சமபெறுமதி கொடுக்கப்பட்ட ஆதனத்தில் கைமாற்றத்திற்கான அதே தீர்வை | |
| 2. | **ஏதேனும் ஆதனம் தொடர்பான நன்கொடை அல்லது நன்கொடை உறுதிப்பத்திரம் அல்லது சகல வகையான சாதனங்கள் தொடர்பாக:-** | |
| | (அ) ஆதனத்தின் பெறுமதி ரூபா 50,000 அல்லது அதற்கு குறைவாயின் ஒவ்வொரு ரூபா 100 இற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 3.00 |
| | (ஆ) ஆதனத்தின் பெறுமதி ரூபா 50,000 த்தை விஞ்சுமாயின் முதல் ரூபா 50,000 இற்கு | 1500.00 |
| | ரூபா 50,000 த்தை விஞ்சும் ஒவ்வொரு ரூபா 100 இற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 2.00 |
| 3. | (1) **பரிமாற்றத்தினால் அல்லது நன்கொடை அளிப்பதனால் அல்லாத வடக்கு மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனம் ஒன்றை கைமாற்றம் செய்யும் சாதனத்தின்:-** | |
| | (அ) பெறுமதி ரூபா 100,000 த்தை விஞ்சாதிருக்குமாயின் ஒவ்வொரு ரூபா 100 இற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 3.00 |
| | (ஆ) பெறுமதி ரூபா 100,000 த்தை விஞ்சுமாயின் முதல் ரூபா 100,000 இற்கும் | 3,000.00 |
| | ரூபா 100,000 த்தை விஞ்சும் ஒவ்வொரு ரூபா 100 இற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 4.00 |
| | (2) பரிமாற்றத்தினால் அல்லது நன்கொடை அளித்தல் தவிர்ந்த வடக்கு மாகாணத்தினுள் ஏதேனும் அசையும் ஆதனம் ஒன்றை கைமாற்றம் செய்யும் ஆவணத்தின் பெறுமதியின் ரூபா 100 இற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 3.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *விடய இல.* | *நிரல் I* | *நிரல் II தீர்வை ரூ. ச.* |
|---|---|---|
| 4. | **மேல் நீதிமன்றம் அல்லது குடியியல் மேன் முறையீட்டு நீதி மன்றமொன்றில் தாக்கல் செய்யப்பட்ட குடியியல் வழக்குகள் தொடர்பாக ஒவ்வொரு ஆவணங்களுக்கும்:-** | |
| | (அ) வழக்கின் பெறுமதி ரூபா 1,000,000 த்தை விஞ்சாத போது வழக்கின் பெறுமதி ஒவ்வொரு ரூபா 1000 அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 2.00 |
| | (ஆ) வழக்கின் பெறுமதி ரூபா 1,000,000 த்தை விஞ்சும் போது | 2000.00 |
| 5. | **மாவட்ட நீதி மன்றமொன்றில் தாக்கல் செய்யப்பட்ட குடியியல் வழக்குகள் தொடர்பாக ஒவ்வொரு ஆவணங்களும்:-** | |
| | (அ) வழக்கின் பெறுமதி ரூபா 1,000,000 த்தை விஞ்சாத போது ஒவ்வொரு ரூபா 1000 அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 1.00 |
| | (ஆ) வழக்கின் பெறுமதி ரூபா 1,000,000 த்தை விஞ்சும் போது | 1000.00 |

*1- 1063/1*

---

**வடக்கு மாகாண மாகாண சபை**

2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டம்

**ஒழுங்குவிதிகள் பிரிவு 75(1)(அ)**

வடக்கு மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, நிதி நியதிச்சட்டத்தின் 38(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்நியதிச்சட்டத்தின் 75(1) (அ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, வடக்கு மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி அமைச்சருமாகிய கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆகிய நான், இவ் ஒழுங்குவிதிகளின்படி விதித்துரைக்கப்பட்ட வங்கிக்கு செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வைக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான கொடுப்பனவுச் சான்றிதழ் ஒன்றினை வங்கி வழங்கும் என்பதும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

க.வி.விக்னேஸ்வரன்,
முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும்,
காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறை
மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்,
வடக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் செயலகம்,
வடக்கு மாகாண மாகாண சபை,
இல.26, சோமசுந்தரம் வீதி,
யாழ்ப்பாணம்.
2015, டிசம்பர் 31.

**ஒழுங்குவிதிகள்**

(அ) விதித்துரைக்கப்பட்ட வங்கி – மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், கணக்கு இல: 030-100150068413

(ஆ) கொடுப்பனவுகளின் விதித்துரைக்கப்பட்ட படிவங்கள் கீழே தரப்படுகின்றன:

1 ஆம் பிரதி உறுதியில் ஒட்டுவதற்கு

| | | | |
|---|---|---|---|
| வடக்கு மாகாண சபையின் 2014 ம் ஆண்டின் 01ம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் 38(2) பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ் | | திகதி: | |
| மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதயின் வடக்கு மாகாண இறைவரி ஆணையாளரிற்கு வரவு வைப்பதற்கு | | கணக்கு இல: | 030-1001-50068413 |
| உறுதி இல: திகதி: | | காணி அமைந்துள்ள மாவட்டம்: | |
| கொடுப்பவரின் பெயரும் முகவரியும்:<br>பெறுபவரின் பெயரும் முகவரியும் : | | உறுதியை சான்றுப்படுத்தும் நொத்தாரிசு / நொத்தாரிசு நிறுவனத்தின் பெயரும் விலாசமும்: | |
| தொகை எழுத்தில்: | ரூ: | உள்ளூராட்சி அதிகாரசபையின் பெயரும்இலக்கமும்: | |
| 1.................................................. 2 ......................................<br>வங்கி உத்தியோகத்தர்கையொப்பம் வங்கி உத்தியோகத்தர்கையொப்பம்<br>(இறப்பர் முத்திரை) (இறப்பர் முத்திரை) | | ................................................<br>வைப்புச் செய்பவரின் ஒப்பம் | |
| இரண்டு வங்கி உத்தியோகத்தர்களின் கையொப்பம் இல்லாவிடின் இச் சான்றிதழ் செல்லுபடியற்றதாகும். | | மவ/முதீ/வமா/ | |
| | | சரிபார்த்தவர் | |

2 ஆம் பிரதி திணைக்கள பிரதி

| | | | |
|---|---|---|---|
| வடக்கு மாகாண சபையின் 2014 ம் ஆண்டின் 01ம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் 38(2) பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ் | | திகதி: | |
| மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதயின் வடக்கு மாகாண இறைவரி ஆணையாளரிற்கு வரவு வைப்பதற்கு | | கணக்கு இல: | 030-1001-50068413 |
| உறுதி இல: திகதி: | | காணி அமைந்துள்ள மாவட்டம்: | |
| கொடுப்பவரின் பெயரும் முகவரியும்:<br>பெறுபவரின் பெயரும் முகவரியும் : | | உறுதியை சான்றுப்படுத்தும் நொத்தாரிசு / நொத்தாரிசு நிறுவனத்தின் பெயரும் விலாசமும்: | |
| தொகை எழுத்தில்: | ரூ: | உள்ளூராட்சி அதிகாரசபையின் பெயரும் இலக்கமும்: | |
| 1.................................................. 2 ......................................<br>வங்கி உத்தியோகத்தர் கையொப்பம் வங்கி உத்தியோகத்தர்கையொப்பம்<br>(இறப்பர் முத்திரை) (இறப்பர் முத்திரை) | | ................................................<br>வைப்புச் செய்பவரின் ஒப்பம் | |
| இரண்டு வங்கி உத்தியோகத்தர்களின் கையொப்பம் இல்லாவிடின் இச் சான்றிதழ் செல்லுபடியற்றதாகும். | | மவ/முதீ/வமா/ | |
| | | சரிபார்த்தவர் | |

3 ஆம் பிரதி வங்கிப்பிரதி

| | | |
|---|---|---|
| வடக்கு மாகாண சபையின் 2014 ம் ஆண்டின் 01ம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் 38(2) பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ் | திகதி: | |
| மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதயின் வடக்கு மாகாண இறைவரி ஆணையாளரிற்கு வரவு வைப்பதற்கு | கணக்கு இல: | 030-1001-50068413 |
| உறுதி இல: திகதி: | காணி அமைந்துள்ள மாவட்டம்: | |
| கொடுப்பவரின் பெயரும் முகவரியும்:<br>பெறுபவரின் பெயரும் முகவரியும் : | உறுதியை சான்றுப்படுத்தும் நொத்தாரிசு / நொத்தாரிசு நிறுவனத்தின் பெயரும் விலாசமும்: | |
| தொகை எழுத்தில்: ரூ: | உள்ளூராட்சி அதிகாரசபையின் பெயரும் இலக்கமும்: | |
| 1...................................... 2 ......................................<br>வங்கி உத்தியோகத்தர் கையொப்பம் (இறப்பர் முத்திரை) வங்கி உத்தியோகத்தர்கையொப்பம் (இறப்பர் முத்திரை) | ...............................................<br>வைப்புச் செய்பவரின் ஒப்பம் | |
| இரண்டு வங்கி உத்தியோகத்தர்களின் கையொப்பம் இல்லாவிடின் இச் சான்றிதழ் செல்லுபடியற்றதாகும். | மவ/முதீ/வமா/ | |
| | சரிபார்த்தவர் | |

4 ஆம் செலுத்துபவரின் பிரதி

| | | |
|---|---|---|
| வடக்கு மாகாண சபையின் 2014 ம் ஆண்டின் 01ம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் 38(2) பிரிவின்கீழ் வழங்கப்படும் சான்றிதழ் | திகதி: | |
| மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதயின் வடக்கு மாகாண இறைவரி ஆணையாளரிற்கு வரவு வைப்பதற்கு | கணக்கு இல: | 030-1001-50068413 |
| உறுதி இல: திகதி: | காணி அமைந்துள்ள மாவட்டம்: | |
| கொடுப்பவரின் பெயரும் முகவரியும்:<br>பெறுபவரின் பெயரும் முகவரியும் : | உறுதியை சான்றுப்படுத்தும் நொத்தாரிசு / நொத்தாரிசு நிறுவனத்தின் பெயரும் விலாசமும்: | |
| தொகை எழுத்தில்: ரூ: | உள்ளூராட்சி அதிகாரசபையின் பெயரும் இலக்கமும்: | |
| 1...................................... 2 ......................................<br>வங்கி உத்தியோகத்தர் கையொப்பம் (இறப்பர் முத்திரை) வங்கி உத்தியோகத்தர்கையொப்பம் (இறப்பர் முத்திரை) | ...............................................<br>வைப்புச் செய்பவரின் ஒப்பம் | |
| இரண்டு வங்கி உத்தியோகத்தர்களின் கையொப்பம் இல்லாவிடின் இச் சான்றிதழ் செல்லுபடியற்றதாகும். | மவ/முதீ/வமா/ | |
| | சரிபார்த்தவர் | |

1- 1063/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.